03.11.2016

தினமணி

## தென்னை விவசாயிகளுக்கு இடுபொருள் விநியோகம்

தானே புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு முழு மானியத்தில் இடுபொருள் வழங்கும் விழா, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், புதுரெங்கநாதபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

2011 டிசம்பர் மாதம் தானே புயல் தாக்கியதில் கடலூர் மாவட்டம் பலத்த சேதத்தை சந்தித்தது. பலா, முந்திரி, வாழை மற்றும் தென்னை மரங்கள் மற்றும் விவசாயப் பயிர்கள் சேதமடைந்தன.

பாதிக்கப்பட்ட விவசாயப் பயிர்களுக்கு தமிழக அரசு பல்வேறு திட்டங்கள் மூலம் நிவாரணம் மற்றும் மறு சாகுபடிக்கான உதவிகளை செய்து உதவியது. அந்த வகையில் தானே புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு, அரசு தென்னை கன்றுகள், இடுபொருள்கள் மற்றும் ஊடு பயிர் விதைகளை அளித்து உதவியது.

இதன் தொடர்ச்சியாக, குறிஞ்சிப்பாடி வட்டாரம், புதுரெங்கநாதபுரம் கிராமத்தில் தானே புயல் மறுவாழ்வு சிறப்புத் தொகுப்பு திட்டத்தின் மூலம், பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு 5-ஆம் ஆண்டுக்கான இடுபொருள்கள் முழு மானியத்தில் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பங்கேற்ற வேளாண் துணை இயக்குநர் (மத்திய திட்டம்) ஹரிதாஸ், தென்னை விவசாயிகளுக்கு இடுபொருள்களை வழங்கினார். பின்னர், தென்னைக்கு உரமிடுதல், பயிர் பாதுகாப்பு குறித்தும், நெல், உளுந்து, மணிலா பயிர்களுக்கான தொழில்நுட்ப அறிவுரைகளையும், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்தும் விளக்கிப் பேசினார்.

**சம்பா நெல்சாகுபடிக்கான விதைகள், உரங்கள் தயார்: வேளாண் இணை இயக்குநர் தகவல்**



மாவட்டத்தில் நிகழ் சம்பா பருவத்துக்கான விதைகள், உரங்கள் தயார் நிலையில் உள்ளதாக புதிதாக பொறுப்பேற்றுள்ள வேளாண் இணை இயக்குநர் தெரிவித்தார்.

மாவட்ட வேளாண் இணை இயக்குநராக இருந்த ரத்தினசபாபதி கடந்த ஜூன் மாதம் ஓய்வு பெற்றார்.

இதனையடுத்து, துணை இயக்குநர் ராமலிங்கம் தாற்காலிகமாகப் பொறுப்பு வகித்து வந்தார். இந்நிலையில் மாவட்ட வேளாண் இணை இயக்குநராக திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தி.கார்த்திகேயன் புதன்கிழமை பொறுப்பேற்றார்.

வேளாண் துணை இயக்குநர்கள் செல்வராஜ், செல்வசேகர், உதவி இயக்குநர் கென்னடி மற்றும் வேளாண் அலுவலர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். இதனையடுத்து, இணை இயக்குநர் தி.கார்த்திகேயன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாவட்டத்தில் 65 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல், 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகைகள், 32 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.

தற்போதைய சம்பா நெல் சாகுபடிக்கு, குறுகிய கால ரகமான கோ 51 விதைகள் 600 டன் அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மானிய விலையில் விதைகளைப் பெற்று பயன் பெறலாம்.

இதேபோல் உரங்களில், யூரியா 20 ஆயிரத்து 815 மெட்ரிக் டன்னும், டிஏபி 4,396 மெ.டன்னும், பொட்டாஷ் 3,693 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 7,604 மெ.டன்னும் தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதால், அரசின் நிர்ணய விலையில் அதனை விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்தலாம். இந்தாண்டு ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் உற்பத்தியை எட்டுவதற்கான இலக்கை அடைய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநில அளவில், விழுப்புரம் மாவட்டம் உணவு உற்பத்தியில் 10 முதல் 12 சதவீதமாக உள்ளது. இதனை 15 சதவீதமாக உயர்த்தவும், மாநில அளவில் முதலிடம் பெறவும் விவசாயப் பணிகள் ஊக்கப்படுத்தப்படும் என்றார்.

**விவசாயிகளுக்கு விதை கிராமத் திட்ட பயிற்சி**



மேற்கு ஆரணி வட்டாரம், மதுரைபெரும்பட்டூரில் விவசாயிகளுக்கு விதை கிராமத் திட்ட பயிற்சி புதன்கிழமை அளிக்கப்பட்டது.

மேற்கு ஆரணி வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) விரிவாக்க சீரமைப்புத் திட்டம் மூலம் விதை கிராமத் திட்டத்தின்கீழ், மதுரைபெருமட்டூர் கிராமத்தில் 40 விவசாயிகளுக்கு எண்ணெய் வித்துப்பயிர்கள் (மணிலா, எள்) விதை உற்பத்தி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந்கப் பயிற்சியில் மகுரைபெருமட்டூர், முருகனந்கல், கனகம்பட்டு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர். மேற்கு ஆரணி வேளாண்மை உதவி இயக்குநர் செ.சுந்தரம், மண்வள பாதுகாப்பு குறித்து விளக்கமளித்தார். மேலும், விதை உற்பத்தியில் உள்ள விதைச்சான்று நிலைகள், வல்லுநர் விதை, ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதைகள் குறித்தும், நெல் விதை உற்பத்தியில், பயிரின் வளர்ச்சி நிலைகளில் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு அவர் பயிற்சி அளித்தார்.

விதைப்பண்ணை அமைப்பதன் வழிமுறைகள், விதைப்பண்ணை பதிவு செய்து விதை உற்பக்கியில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள், அறுவடை, சேமிப்பு மற்றும் சுக்கிகரிப்பு முறைகள் பற்றி மேற்கு ஆரணி வேளாண்மை அலுவலர் பவித்ராதேவி விளக்கிக் கூறினார்.

நெல், மணிலா மற்றும் உளுந்து பயிர்களில் இயந்திர விதைப்பு முறைகள் மற்றும் இவை தொடர்பான அரசு மானியத் திட்டங்கள், நீர் மேலாண்மை முறைகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் பூஞ்சாணக் கொல்லிகள் தேர்வு மற்றும் பயன்படுக்கும் முறைகள் பற்றி மேற்கு ஆரணி வேளாண்மை அலுவலர் பவித்ராதேவி பயிற்சி அளிக்தார். மேற்கு ஆரணி அட்மா திட்டத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவேந்திரன், உயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்துகளை பயன்படுத்தும் முறைகள் குறிக்கு செயல்முறை விளக்கம் அளிக்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் முக்கு, உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் பூஞ்சாணக்கொல்லி கொண்டு விதைநேர்த்தி செய்யும் செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

வேளாண் வணிகத் துறையின் உதவி வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன், வேளாண் விளைபொருள்களை சந்தைப்படுக்குகல், கரம் பிரிக்கல், கினசரி சந்தை நிலவரங்களை அறிந்து கொள்ளும் செயலி பற்றி விளக்கிக் கூறினார். மணிலா பயிரில் ஜிப்சம் இட்டு மண் அணைக்கல், நுண்ணூட்டச்சக்கு இடுகல், பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு வயல்மட்ட

அளவிலான விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஆனந்தி மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

**கலப்பினக் கரும்புகளை உருவாக்கிய விஞ்ஞானி!**



நவீன இந்தியாவின் விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சியில் சர்க்கரை ஆலைகளுக்கு பெரும் பங்குண்டு. சர்க்கரை ஆலைகளின் இடுபொருளான கரும்பு இந்தியாவில் விளைந்தபோதும், அதன் இனிப்புத்தன்மை குறைவாக இருந்தது. எனவே ஜாவா போன்ற தூரக் கிழக்கு நாடுகளிலிருந்து கரும்பு, சர்க்கரையை இறக்குமதி செய்ய வேண்டியிருந்த்து.

இந்நிலையை மாற்ற வேண்டும் என்று முயன்றார் சுதந்திரப் போராட்ட வீரரும் கல்வியாளருமான மதன் மோகன் மாளவியா. இந்திய கரும்பு ரகங்களை மேம்படுத்தும் ஆராய்ச்சிகளைத் துவங்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

அதை ஏற்று, சி.ஏ.பார்பர், டி.எஸ்.வெங்கட்ராமன் ஆகிய இரு விஞ்ஞானிகள் கரும்பு ஆராய்ச்சியைத் துவக்கினர்.

தமிழகத்தின் கோயம்புத்தூரில், கரும்பு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தைத் துவங்கிய அவர்கள், பல்வேறு வீரிய ஒட்டுரகக் கரும்பினங்களை உருவாக்கினர். அதன் காரணமாக இந்தியாவில் கரும்பு விளைச்சல் ஐந்தாண்டுகளில் இரு மடங்காகியது. அதன் சர்க்கரை பிழிதிறனும் அதிகரித்தது.

இந்தப் பணியில் விஞ்ஞானிகள் வெங்கட்ராமன், பார்பருடன் இணைந்து பணியாற்றி, இந்திய கரும்பினங்களின் இனிப்பு சுவை, பிழிதிறனை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர், கேரளத்தைச் சேர்ந்த விஞ்ஞானி எடவலேத் கக்கத் ஜானகி அம்மாள். சிறந்த தாவரவியல் விஞ்ஞானியான அவர், உயிர்க்கலமரபியல் **(cytogenetics),** தொகுதிப் புவியியல் **(phytogeography)** துறைகளில் முன்னோடியாவார்.

கேரளத்தின் தலச்சேரியில், 1897, நவ. 4-இல் பிறந்தார் ஜானகி. அவரது தந்தை எட்வலேத் கக்கத் கிருஷ்ணன், சென்னை மாகாணத்தில் நீதித்துறை நடுவராகப் பணிபுரிந்தார். தாழ்த்தப்பட்ட தீயா சமூகத்தில், ஆறு சகோதரர்களுடனும் ஐந்து சகோதரிகளுடனும் பிறந்த ஜானகிக்கு படிப்பில் அதீத ஆர்வம். அவரது குடும்பமும் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தது.

இளமையிலேயே தாவரவியலில் ஈடுபாடு கொண்ட ஜானகி, தலச்சேரியில் பள்ளிப் படிப்பை முடித்தவுடன், சென்னை ராணி மேரி கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், சென்னை மாநிலக் கல்லூரியில் தாவரவியலில் ஹானர்ஸ் பட்டமும் பெற்றார். மாநிலக் கல்லூரியில் பயின்றபோது அங்கிருந்த பேராசிரியர்களின் தாக்கத்தால் உயிர்க்கல மரபியலில் ஆர்வம் கொண்டார்.

படிப்பை முடித்தவுடன் சென்னை மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்பித்தார். இடையே, அமெரிக்காவின் மிக்ஸிகன் பலகலைக்கழகம் சென்ற அவர், அங்கு முதுநிலைப் பட்டம் பெற்று (1925) நாடு திரும்பி, மீண்டும் கல்விப்பணியைத் தொடர்ந்தார்.



பிறகு கிழக்கு நாடுகளுக்கான பார்பர் நினைவு உதவித்தொகையை முதலாவதாகப் பெற்ற அவர், மிக்ஸிகன் பல்கலைக்கழகம் சென்று ஆராய்ச்சிப் படிப்பில் சேர்ந்து,

1931-இல் டி.எஸ்சி. பட்டம் பெற்றார். வெளிநாடு சென்று ஆய்வியல் முனைவர் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி அவர்தான்.

அதன் பின் நாடு திரும்பிய ஜானகி, 1932 முதல் 1934 வரை, திருவனந்தபுரத்தில் உள்ள மஹாராஜா அறிவியல் கல்லூரியில் தாவரவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். பிறகு கோவையில் கரும்பு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தில் மரபியலாளராக விஞ்ஞானி பார்பருடன் இணைந்து பணியாற்றினார். அப்போது சச்சாரம் ஸ்பான்டேனியம் என்ற **(Saccharum spontaneum)** காட்டினக் கரும்பு ரகத்தின் மரபியலை அவர் ஆராய்ந்தார். அதன் விளைவாக, அங்கு பல உள்நாட்டுக் கலப்பு மரபின கரும்பு ரகங்களை உருவாக்கினார்.

கரும்பு சார்ந்த உயிர்க்கலவியல் ஆய்வுகளில், கரும்பில் பல சிறப்பினக் கலப்பு, மரபினக்கலப்பு வகைகளை, கரும்பையும் அதைச் சார்ந்த புல்லினங்களையும் மூங்கில் போன்ற புல் பேரினங்களையும் இணைத்து உருவாக்க வழிவகுத்தது ஜானகியின் ஆராய்ச்சி. உள்நாட்டு கலப்பினக் கரும்பு ரகங்களான **Saccharum x Zea, Saccharum x Erianthus, Saccharum x Imperata, Saccharum x Sorghum** ஆகியவை அப்போது உருவாக்கப்பட்டன. ஆயினும் அங்கு ஜாதிரீயான பாகுபாடுகளால் பாதிக்கப்பட்ட ஜானகி, அங்கிருந்து வெளியேறினார்.

அதையடுத்து, லண்டன் சென்ற அவர், அங்கு 1940 முதல் 1945 வரை, ஜான் இன்னேஸ் தோட்டக்கலை நிறுவனத்தில் இணை உயிர்க்கலவியல் ஆய்வாளராகப் பணிபுரிந்தார். அடுத்து, விஸ்லேயிலுள்ள அரசு தோட்டக்கலைக் கழகத்தில் 1945 முதல் 1951 வரை, உயிர்க்கலவியல் விஞ்ஞானியாகப் பணிபுரிந்தார். அவர் பிரிட்டனில் இருந்த காலம் இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த காலமாகும். ஜெர்மானிய விமானங்களின் குண்டுவீச்சுப் புகை நடுவே அவர் தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

நாட்டின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் அழைப்பை ஏற்று 1951-இல் நாடு திரும்பிய ஜானகி, **Botanical Survey of India- (BSI)-** இன் சிறப்பு அலுவலராக 1952-இல் பொறுப்பேற்றார். அப்போது அவரது முயற்சியால், பிஎஸ்ஐ நான்கு பிராந்திய மையங்களில் இயங்கும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டது. கோவை (1955), புனா (1955) ஷில்லாங் (1955), டேராடூன் (1956) ஆகிய மையங்கலிலும் கொல்கத்தாவில் தலைமையகமும் கொண்டதாக பிஎஸ்ஐ மேம்படுத்தப்பட்டது. அதன் தலைவராகவும் அவர் உயர்ந்தார்.

அலாகாபாத்திலுள்ள மத்திய தாவரவியல் ஆய்வகத்தின் தலைவராகவும், ஜம்முவிலுள்ள பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தின் சிறப்பு அலுவலராகவும், அரசுப் பணியில் ஜானகி பணியாற்றினார். டிராம்பேயிலுள்ள பாபா அணு ஆராய்ச்சிக் கழகத்திலும் சிறிதுகாலம் அவர் பணி புரிந்தார்.

இறுதியாக 1970-இல் சென்னை திரும்பிய அவர், சென்னை பல்கலைக்கழகத்தின் தாவரவியல் உயராய்வு மையத்தில் மதிப்புறு விஞ்ஞானியாகச் செயல்பட்டார். அப்போது மதுரவாயலில் உள்ள மத்திய கள ஆய்வகத்தில் 1984 வரை பணியாற்றினார்.

இந்திய அறிவியல் அகாதெமி (1935), இந்திய தேசிய அறிவியல் அகாதெமி (1957) ஆகியவற்றில் உறுப்பினராக ஜானகி அம்மாள் இருந்தார். அவருக்கு 1977-இல் இந்திய அரசின் பத்மஶ்ரீ விருது வழங்கப்பட்டது. சாகுபடிப் பயிரினங்களின் குரோமசோம் வரைபடங்கள் என்ற நூலை விஞ்ஞானி சி.டி.டார்லிங்கனுடன் இணைந்து (1945) எழுதி வெளியிட்டார் ஜானகி. தாவரங்களும் மனிதர்களும் (1974) என்ற நூலையும் அவர் எழுதியுள்ளார். ஓய்வுக்காலத்தில் மூலிகைத் தாவரங்கள் குறித்த ஆய்வுகளிலும் **(ethnobotany)**அவர் ஈடுபட்டார். கேரள மழைக்காடுகளிலுள்ள அரிய மூலிகைகளின் மாதிரிகள் சேகரித்த அவர் அவற்றை முறைப்படி பட்டியலிட்டார்.

திருமணம் செய்து கொள்ளாமல், வாழ்நாள் முழுவதும் தாவரவியல் ஆராய்ச்சிக்கே செலவிட்ட ஜானகி அம்மாள், 1984, பிப். 7-இல் மறைந்தார். உயிரியல் வகைப்பாட்டியலில் சிறந்த ஆய்வு மாணவர்களை உருவாக்கும் நோக்கில், வனத்துறை அமைச்சகம் சார்பில் இ.கே.ஜானகி அம்மாள் தேசிய விருது 1999 முதல் விலங்கியல், தாவரவியல் பிரிவுகளில் வழங்கப்படுகிறது.

தினமலர்

## சீத்தா பழம் விளைச்சல் அதிகம்:சிறு விவசாயிகளுக்கு லாபம்

மஞ்சூர் :மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேயிலை தோட்டம் நடுவே, சில்வர் ஓக் மரம், மருத்துவ குணம் கொண்ட சீத்தா பழம் வளர்க்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் அறுவடைக்கு தயாராகும் சீத்தா பழத்தை சந்தைக்கு எடுத்து சென்று விற்பனை செய்து வருகின்றனர்.இங்கு விளையும், சீத்தா பழத்தில், 10 வகைகள் உண்டு. 100 கிராம் எடையுள்ள ஒரு சீத்தாபழத்தில் நார்சத்து, கொழுப்புசத்து, கால்சியம், மக்னீஷியம், தாமிரம், குளோரின், வைட்டமின்'சி', பொட்டாசியம் உள்ளிட்ட சத்துகள் அடங்கியுள்ளன. இதயநோய், காசநோயை குணப்படுத்தும் மருத்துவ குணம் சீத்தா பழத்துக்கு உள்ளது. விவசாயி பீமன் கூறுகையில்,"குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைக்கும், சீத்தா பழம் தேயிலை தோட்டத்தில், அதிகளவில் ஊடுபயிராக விளைவிக்கப்படுகிறது. இதனை அதிகளவில் வளர்க்க, தோட்டக்கலை துறை ஊக்குவிப்பு அளிக்க வேண்டும்," என்றார்.

## உரம் இடும் பணியில் விவசாயிகள் 'பிசி'

கோத்தகிரி :கோத்தகிரி சுற்றுப்புற பகுதியில் ஓரளவு மழைப்பெய்துள்ளதால், தேயிலை தோட்டங்களுக்கு உரமிடுவதில் விவசாயிகள் துரிதமாக்கியுள்ளனர்.

கோத்தகிரி சுற்றுப்புற பகுதியில், பருவமழைப் பொய்த்தன் காரணமாக, விவசாய நிலங்கள் மற்றும் நீர் ஆதாரங்கள் காய்ந்து கிடந்தன. குறிப்பாக, தேயிலை தோட்டங்கள் வாட்டம் கண்டு, மகசூல் வெகுவாக குறைந்தது. நகரம் மற்றும் கிராமப்புறங்களில் தண்ணீர் தட்டுபாடு நிலவியது.

இந்நிலையில், கடந்த இரு நாட்களாக, கோத்தகிரி நகரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில், இரவு நேரங்களில், பரவலான மழை பெய்துள்ளது. இதனால்,

தேயிலை தோட்டம் உட்பட, விவசாய நிலங்களில், ஈரப்பதம் ஓரளவு அதிகரித்துள்ளது.

இதனால், விவசாயிகள் உரம் வாங்கி, தங்களது தோட்டங்களுக்கு இட்டு, பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தினகரன்

**வறண்ட சருமத்தை போக்கும் மருத்துவம்**




எளிதில் கிடைக்க கூடிய மூலிகைகள், சமையலறையில் உள்ள உணவுப் பொருட்கள் போன்றவற்றை பயன்படுத்தி பாதுகாப்பான மருத்துவத்தை நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் பார்த்து வருகிறோம். அந்தவகையில், ஆவாரம் பூ, அருகம்புல், கீழாநெல்லி, கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றை கொண்டு வறண்ட சருமத்தை போக்கும் மருத்துவத்தை காணலாம்.

தோல் சுத்தமாக இருக்க வேண்டும். ஈரல் நல்ல முறையில் செயல்பட வேண்டும். இல்லையெனில் வறண்ட சரும பிரச்னை ஏற்படும். வறண்ட சருமம் என்பது பல்வேறு நோய்களின் வெளிப்பாடு. தைராய்டு, சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு

வறண்ட சருமம் ஏற்படும். இப்பிரச்னையை போக்க அதிகளவில் பழங்கள் எடுத்து கொள்ள வேண்டும். ஆவாரம் பூவை பயன்படுத்தி வறண்ட சருமத்தை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

ஆவாரம்பூ, பனங்கற்கண்டு, விளாமிச்சை ஆகியவற்றை கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர வறண்ட சருமம் மாறும். தோல் மென்மையாகவும், பொலிவுடனும் இருக்கும். ஆவாரம் பூ பல்வேறு நன்மைகளை கொண்டது. வறண்ட சருமத்துக்கு மருந்தாக விளங்குகிறது.

அருகம் புல்லை பயன்படுத்தி மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: அருகம்புல், கீழாநெல்லி, தயிர். 100 மில்லி அருகம்புல் சாறுடன், பெரிய நெல்லிக்காய் அளவுக்கு கீழாநெல்லி இலை பசை சேர்க்கவும். இதனுடன் ஒரு ஸ்பூன் தயிர் சேர்த்து கலந்து சாப்பிட்டுவந்தால் வறண்ட சருமம் மாறும். தோல் பொலிவு பெறும். உடலுக்கு போதிய சத்துக்கள் கிடைக்கும். தோல் மென்மையாகும்.

வறண்ட சருமத்துக்கு கீழாநெல்லி மருந்தாகிறது. பல்வேறு நன்மைகளை கொண்ட கீழாநெல்லி ஈரலை பலப்படுத்தும் தன்மை கொண்டது. உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியது. மருத்துவ குணங்களை உடைய அருகம்புல் நோய் எதிர்ப்பு சக்தி உடையது. பூஞ்சை காளான்கள், நுண்கிருமிகளை போக்க கூடியது. ரத்தத்தை சுத்திகரிக்க கூடியது. வயது முதிர்வை தடுக்கும் தன்மை உடையது. அருகம்புல் புரதச்சத்து கொண்டது.

ஆவாரம் மொட்டு, இலை ஆகியவற்றை வெயிலில் காயவைத்து பொடி செய்து கொள்ளவும். இந்த பொடியுடன் பால் சேர்த்து கலந்து வறண்ட சருமத்தில் பூசி சுமார் 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் வறண்ட சருமம் சரியாகும். தினமும் இவ்வாறு செய்வதால் தோல் எண்ணெய் பசை வர ஆரம்பிக்கும். தோல் மென்மையாகும்.

ஆவாரம் பொடி, கஸ்தூரி மஞ்சள், கசகசா ஆகியவற்றை நீரில் சேர்த்து கலந்து மேல் பூச்சாக பூசி சிறிது நேரம் கழித்து குளித்தால், வறண்ட சருமம் மாறும். தோல் பளபளப்பாகும். தோல் ஆரோக்கியத்தை அடையும். எளிதில் கிடைக்க கூடிய

அருகம்புல், கீழாநெல்லி, ஆவாரம்பூ போன்றவற்றை பயன்படுத்தி இல்லத்தில் இருந்தவாறே வறண்ட சரும பிரச்னைகளுக்கு எளிதில் தீர்வு காணலாம்.

பால் மருக்களை குணப்படுத்தும் மருத்துவம் குறித்து பார்க்கலாம். நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் வேப்பிலை பொடி, திரிபலா சூரணம், மஞ்சள் பொடி ஆகியவற்றை சம அளவு எடுத்து நீர் சேர்த்து கலந்து பூசி வர பால் மருக்கள் மறையும்.

## கொங்கணாபுரத்தில் ஒன்றரை அடி வளர்ந்த அதிசய காளான்

இடைப்பாடி, : கொங்கணாபுரம் ஒன்றியம் குருமப்பட்டியை சேர்ந்த சித்த வைத்தியர் ராமலிங்கம்(45). இவரது தனது வீட்டு தோட்டத்தில், மூலிகை செடிகளை வளர்த்து வருகிறார். இதில் காளான்களும் அடங்கும். இந்நிலையில், இவர் வளர்த்த காளான்களில் இரண்டு வழக்கமான அளவை விட, அதிகமாக இருந்தது. வழக்கமாக வளரும் காளான் சின்னதாக குட்டையாக இருக்கும். ஆனால் தற்போது வளர்ந்துள்ள காளான் ஒன்றரை அடி மற்றும் ஓரடி உயரம் வளர்ந்திருந்தது. இதனை அறிந்த அப்பகுதியைச் சேர்ந்த பலர் அதிசய காளானை பார்த்து சென்றனர். இந்த காளானை சமைத்து சாப்பிட்டால், உடல் வலிமை பெறும் என சித்த வைத்தியர் ராமலிங்கம் தெரிவித்தார்.

## பூலாம்பட்டியில் நெல் நடவு பணிகள் தீவிரம்

இடைப்பாடி, : பூலாம்பட்டியில் நெல்நடவு பணிகள் தீவிரமடைந்துள்ளது. பூலாம்பட்டி காவிரி கரையோர பகுதி மற்றும் மூலப்பாறை, குப்பனூர், கூடக்கல், காட்டூர், நெடுங்குளம், கோனோரிப்பட்டி, கல்வடங்கம், புள்ளக்கவுண்டம்பட்டி மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் நெல் நற்று நடவு பணிகள் தொடங்கின. சுமார் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் வயல்களில் ஏர் உழுது ெநல் நாற்று பணிகளை தொடங்கினர். நிலத்தில் ஏர் கழப்பையால் உழும் போது மண்ணில் இருந்து வெளியே வரும் புழுக்களை சாப்பிடுவதற்கு கொக்கு மற்றும் நாரைகள் கூட்டம் கூட்டமாக முகாமிட்டுள்ளன.

## இடைப்பாடி புதன் சந்தையில் □20 லட்சத்திற்கு காய்கறி விற்பனை

இடைப்பாடி, : இடைப்பாடி புதன்சந்தையில், 60 டன் காய்கறிகள் □20 லட்சத்திற்கு விற்பனை நடந்தது.

சேலம் மாவட்டம் இடைப்பாடியில், வாரந்தோறும் புதன்கிழமை அன்று சந்தை நடைபெறுவது வழக்கம். சந்தைக்கு கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு ஆகிய பகுதிகளில் இருந்து 60 டன் காய்கறிகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். 25 கிலோ தக்காளி ஒரு கூடை □100 முதல் 130 வரையும், முட்டைகோஸ் கிலோ □12க்கும், பின்ஸ் கிலோ □25க்கும், கேரட் கிலோ □20 முதல் 30க்கும், பீட்ரூட் கிலோ □20க்கும், கருணை கிழங்கு □20க்கும், பெரியவெங்காயம் கிலோ □ 10 முதல் 17 வரையும் விற்பனை செய்யப்பட்டது. அதே போல் 10 கிலோ கொண்ட ஆடு □3, 700 முதல் 4,300 வரையும், சேவல், கோழி □100 முதல் 500 வரையும் விற்பனையானது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். நேற்று மட்டும் □20 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது. தக்காளி விலை குறைவாக விற்றது. மேலும் சுற்றுவட்டாரத்தில் இருந்த திரளாக கிராம மக்கள் வந்திருந்து ஒரு வாரத்திற்கு தேவையான காய்கறிகளை வாங்கி சென்றனர்.

## கலப்பின காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி

தர்மபுரி: பென்னாகரம் தோட்டக்கலைத்துறை சார்பில், வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ், மாவட்ட அளவிலான ஒரு நாள் கலப்பின காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி, பென்னாகரம் ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் நடந்தது. பயிற்சிக்கு பென்னாகரம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோகன் தலைமை வகித்தார்.

இப்பயிசியில் கலப்பின காய்கறிகளின் சாகுபடி மற்றும் பராமரிப்பு முறை, பயிரைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளை கண்டறிதல், கலப்பின காய்கறி பயிர்களின் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பல்வேறு பகுதிகளில் இருந்து 40 விவசாயிகள் கலந்து

கொண்டனர். இதில் உதவி பேராசிரியர் இந்துமதி, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் விஜயராஜன், பழனியப்பன், தண்டாயுதம், துரைசாமி, வட்டார தொழில்நுட்ப மேலாளா சரவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## அவிநாசியில் ரூ.8.32 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அனுப்பர்பாளையம், : அவிநாசியில் நேற்று ரூ.8.32 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. பருத்தி விலை குவிண்டாலுக்கு ரூ.200 வரை அதிகரித்தது. அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஏலத்துக்கு 469 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. இதில், ஆர்.சி.எச் ரகம் குவிண்டால் ரூ.5,200 முதல் ரூ. 5,750 வரையிலும், டி.சி.எச். ரகம் குவிண்டால் ரூ.5,600 முதல் ரூ.6,075 வரையிலும், மட்ட ரகம் ரூ.1,800 முதல் ரூ.2,200 வரையிலும் ஏலம் கோரினர். மொத்தம் ரூ.8.32 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து 104 விவசாயிகளும், 7 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## பொள்ளாச்சியில் 35 மி.மீ. மழை பதிவு

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளில், கடந்த 30ம் தேதி இரவு முழுவதும் மின்னல், இடியுடன் கனமழை பெய்தது.

கடந்த சில நாட்களாக பகல் நேரத்தில் லேசாக வெயிலின் தாக்கம் இருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு மீண்டும் கனமழை பெய்ய துவங்கியது. சுமார் இரண்டு மணி நேரம் பெய்த கன மழை, பின்னர் சாரலுடன் தொடர்ந்து 4 மணி நேரத்திற்கு மேல் பெய்தது. இதில் அதிகபட்சமாக பொள்ளாச்சி நகர் பகுதியில் 35 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

## விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

தா.பேட்டை, : தொட்டியத்தில் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. தொட்டியம் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனை கூட்டம் அட்மா

திட்ட வட்டார தொழில்நுட்ப வளர்ச்சிக்குழு தலைவர் ராஜாமணி தலைமையில் நடைபெற்றது. வட்டார அட்மா திட்ட தலைவர் முத்துக்குமார் முன்னிலை வகித்தார். அட்மா திட்டத்தில் வரும் நிதியாண்டில் செய்யப்பட வேண்டிய செயல்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் புஷ்பா வேளாண்மை துறையில் உள்ள மானிய திட்டங்கள் குறித்தும், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர் சவீதா கால்நடை பருவ காலத்தில் பாதுகாக்கும் முறைகள் பற்றியும் பேசினர். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் யுவராஜ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## இயற்கை உரம் மூலம் பள்ளியில் வளர்க்கப்பட்ட நெல் அறுவடை

காரைக்கால்: காரைக்கால் திருநள்ளாறு அகலங்கண்ணு கிராமத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் நெல் அறுவடை நடைபெற்றது. பள்ளி வளாகத்தில், மாணவர்களுக்கு இயற்கை வேளாண்மை குறித்த ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில், கடந்த சில மாதங்களுக்கு முன் டி.கே.எம்9 ரக நெல் நாற்று நடப்பட்டது. இந்நெல்லுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் இயற்கை உரம் தயாரித்து தெளித்து வந்தனர்.

நேற்று முன்தினம் நெல் அறுவடை கொண்டாட்டம் நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் மல்லிகா தலைமையில், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து நெல் அறுவடையில் ஈடுபட்டனர். அறுவடைக்கு பின், நெல் நாற்று நட்டது முதல் அறுவடை வரையிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மற்ற வகுப்பு மாணவர்களும் கலந்து கொண்டனர். மேலும், நெல்லை பதர் நீக்குதல், சந்தைப்படுத்துதல் குறித்த விளக்கங்கள் அளிக்கப்பட்டது. இயற்கை உரத்தை பயன்படுத்துவோம், செயற்கை உரங்களை தவிர்ப்போம் என மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

## பிரச்னைக்குரிய பாசனநீர் ஆய்வு செய்வது எப்படி? வேளாண் அதிகாரி விளக்கம்

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வேளாண்மைக்கு நல்ல மண்ணும், நீரும் மிகமிக அவசியம். எனவே பாசன நீரின் தன்மையை அறிவதற்கு பிரச்னைக்குரிய பாசனநீர் அவசியம் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

பாசன நீரில் உப்புத்தன்மை, களர்த்தன்மை என இரண்டு முக்கிய பிரச்னைகள் உள்ளன.

அதாவது நீரில் மொத்தம் கரையக்கூடிய உப்பின் நிலை 4 மிமோஸ் செ.மீக்கு மேல் இருந்தால் அது உப்புத்தன்மை உள்ள நீர் என்று அழைக்கப்படும். பாசன நீரில் கரையும் தன்மையுள்ள கால்சியம், மெக்னீசியம், சோடியம், பொட்டாசியம் தாதுக்களின் குளோரைடு, சல்பேட் அயனிகள் அதிக அளவில் இருந்தால் உப்புத்தன்மை ஏற்படுகிறது. அதேபோன்று பாசன நீரில் சோடியம் கார்பனேட், சோடியம்பைகார்பனேட், மெக்னீசியம் கார்பனேட் உப்புகள் அதிக அளவில் இருந்தால் களர்த்தன்மை ஏற்படுகிறது.

நீர் மாதிரி எடுப்பதற்கு சுத்தமான கண்ணாடி பாட்டில் (அல்லது) பாலித்தீன் பாட்டிலை உபயோகிக்க வேண்டும். மோட்டார் இணைக்கப்பட்ட கிணற்றில் 1030 நிமிடம் தண்ணீரை ஓடவிட்டு அந்த தண்ணீரிலேயே பாட்டிலைக் கழுவி மாதிரிக்காக அரை லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டும். கண்மாய், குளங்களில் நீர் மாதிரி எடுக்கும் போது பாட்டிலின் வாயைக் கைவிரலால் மூடி மூழ்கடித்து மாதிரி எடுக்க வேண்டும். கமலை உள்ள கிணற்றில் ஒரு கமலை நீரில் மாதிரிக்காக நீர் சேகரிக்க வேண்டும்.

கயிறுகட்டி இறைக்கும் கிணற்றில் 2 (அல்லது) 3 வாளி தண்ணீர் இறைத்து பெரிய வாளியில் சேகரித்து பின் மாதிரி எடுக்க வேண்டும். எந்த இறவைச் சாதனமும் இல்லாத வெகு ஆழமான கிணற்றில் பாலித்தீன் பாட்டிலில் சிறு கல்லைக்கட்டி இறக்கி நீர் மாதிரி எடுக்க வேண்டும். இவ்வாறு சேகரிக்கும் நீர் மாதிரிகளை காலை 9 மணிக்குள் எடுக்க வேண்டும்.

அதற்கு மேற்பட்ட நேரத்தில் மாதிரி எடுத்தால் சூரிய வெளிச்சத்தில் ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு உண்மையான தண்ணீரின் தன்மையை அறிய முடியாமல் போய்விடும். மாதிரி எடுத்த அன்றே நீர் மாதிரிகளை ஆய்வகத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். பாசன நீர்மாதிரி எடுத்த பாட்டிலை கண்டிப்பாக வெயிலில் வைக்காமல் பாதுகாப்புடன் கொண்டு சேர்க்க வேண்டும். நீர் மாதிரியுடன் அனுப்ப வேண்டிய விவரங்கள்.

நீர் மாதிரி அனுப்பும் பொழுது விவசாயியின் பெயர், கிராமம் மற்றும் முகவரி விவரம், கிணறு இருக்கும் நிலத்தின் சர்வே எண், வயல் பெயர், திறந்த வெளிக்கிணறா அல்லது ஆழ்குழாய் கிணறா, குளமா, கண்மாயா அல்லது ஆற்று நீரா என்ற விவரம் மற்றும் தண்ணீர் பாயும் நிலத்து மண்ணின் ஆய்வு விவரம் ஆகிய விபரங்களையும் (ஆய்வு செய்திருப்பின்) சேர்த்து அனுப்ப வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தை பொருத்தமட்டில் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் மண், நீர் ஆராய்ச்சி நிலையம், காட்டுத்தோட்டம் (தஞ்சாவூர்) ஆகிய இடங்களில் ஆய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## செம்பனார்கோவில் வட்டாரத்தில் 4,000 ஏக்கரில் வரப்பில் உளுந்து சாகுபடி செய்ய திட்டம் : வேளாண் அதிகாரி தகவல்

தரங்கம்பாடி: செம்பனார்கோவில் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை திட்டத்தில் 4 ஆயிரம் ஏக்கரில் வயல் வரப்பில் உளுந்து சாகுபடி செய்ய திட்டமிட்டிருப்பதாக வேளாண் அதிகாரி தெரிவித்தார். நாகை மாவட்டம் திருக்கடையூர் அருகே ஆக்கூர் முக்கூட்டில் ஒரு விவசாயியின் வயல் வரப்பில் உளுந்து பயறு சாகுபடி திட்டம் நேற்று துவக்கப்பட்டது. செம்பனார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் வெற்றிவேலன் தலைமை வகித்தார். விவசாயிகள் வரப்பில் உளுந்து பயறு விதைகளை விதைத்தனர்.

இதைத்தொடர்ந்து வேளாண் உதவி இயக்குநர் வெற்றிவேலன் பேசியது: வயல் வரப்புகளில் உளுந்து, பயறு சாகுபடி செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெறலாம். பயிர் காலமும் குறைவு. இதற்கு உரம் தேவையில்லை. இதன் மூலம் வரப்புகளில் நன்மை தரும் பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். உளுந்து பயிர்களின் உலர்ந்த செடிகளை மாட்டு தீவனமாக பயன்படுத்தலாம்.

தேசிய வேளாண்மை திட்டத்தில் செம்பனார்கோவில் வட்டாரத்தில் 4 ஆயிரம் ஏக்கரில் வயல் வரப்புகளில் உளுந்து பயறு சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்து. இவ்வாறு அவர் பேசினார். அட்மா தொழில்நுட்ப மேலாளர் திருமுருகன், வேளாண் உதவி அலவலர் பிரபாகரன், மற்றும் விவசாயிகள், காரைக்கால் ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.